<u>முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கள்ளக்குறிச்சி</u>

**<u>அசல் வழக்கு எண். 227/2024</u>**

<u>வா.சா. 2 – செல்வநாதன்</u>

<u>தேதி 17.03.2026</u>

<u>வா.சா. 2 – சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னுடைய சொந்த ஊர் எறையூர் கிராமம். பிரதிவாதியை தெரியும். வாதி என்னுடைய உறவினர் இல்லை. வாதி தபால்க்காரர் என்ற முறையில் எனக்கு பழக்கம். பிரதிவாதி வாதியிடம் ரூ.12,00,000/-ம் பெற்றுக்கொண்டு தாவா கடனுறுதி சீட்டை எழுதிக்கொடுத்தார். நான் சாட்சி கையெழுத்து போட்ட பிறகுதான் தாவா கடனுறுதி சீட்டு எழுதப்பட்டதா என்றால் ஆம். தாவா கடனுறுதி சீட்டில் நான் 2 வது சாட்சியாக கையொப்பம் போட்டுள்ளேன். பணம் கொடுத்து கடனுறுதி சீட்டு எழுதப்பட்டதால் நான் சாட்சி கையொப்பம் இட்டேன். ரூ.12,00,000/-ம் கொடுக்கப்பட்டுதான் தாவா கடனுறுதி சீட்டு எழுதப்பட்டது. நான் விவசாய வேலை செய்து வருகிறேன். நான் 06.02.2022 ந்தேதி வாதி வீட்டில் வைத்து சாட்சி கையெழுத்து போட்டேன். மார்ட்டின் என்பவரை எனக்கு தெரியாது. நான் தாவா கடனுறுதி சீட்டில் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றும் வாதி எனக்கு உறவுக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.